24-10-1993

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 07 ஞாயிற்றுக்கிழமை (24-10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 330

# மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட பொலிஸாருக்கும் பதவி உயர்வு!

## அரசியல் தலையீடு குறித்து உயர் அதிகாரிகள் அதிருப்தி

கொழும்பு, ஒக்டோபர் 24

பொலிஸ் அதிகாரிகளுக்கான பதவி உயர்வுகளில் அரசியல் தலையீடு இப்போது அதிகரித்து வருவதாகவும்—

அந்தவகையில் மனித உரிமைகளை மீறியதாக குற்றம் சாட்டப்பட்ட பல இளம் பொலிஸ் அதிகாரிகளுக்கும் பதவி உயர்வுகள், வழங்கப் பட்டிருப்பதாகவும் — பொலிஸ் உயர் மட்டங்களில் அதிருப்தி நிலவுகிறது.

இந்தகைய சூழ்நிலையில் பொலிஸ் திணைக்களம் திறமையாக இயங்க முடியாத நிலைமை உருவாகி வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டி உள்ளன.

அரசியல் அழுத்தம் காரணமாக தகைமையற்றவர்கள் பதவி உயர்வுகளைப் பெற விருப்பதால் தகுதியுடையோர் அதிருப்தியடைந்துள்ளனர் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலைமையினால் பொலிஸ் திணைக்களத்தின் கீர்த்திக்கு பங்கம் ஏற்படுகின்றதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அரசியல் அழுத்தத்தினால் தகுதி இல்லாதவர்கள் பதவி உயர்வுகளை பெறவிருப்பதால் பொலிஸ் அதிகாரிகளில் சிலர் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே ஓய்வுபெற தயாராகி வருகின்றனர் என்று கொழும்புத் தகவல்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி செய்தி வெளியிட்டது. (ஒ-6)

## யாழ்ப்பாண நீதிமன்றம் திறந்து வைக்கப்பட்டது

தமிழீழத்தின் நான்காவது நீதிமன்றம் நல்லூர் கோவில் வீதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண பகுதி மக்களின் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கும் பணியை அது மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நீதிமன்றத் திறப்பு விழா வைபவத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் திரு. செந்தாளன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து காவல்துறையினர் 'பாண்ட்' வாத்தியம் இசைக்க, காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றினார்.

நீதிமன்றத்தை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி திறந்துவைத்தார்.

நீதிமன்றம் திறக்கப்பட்டதை அடுத்து நீதியாளர்களான மயூரன், சுடர், இசையமுதன் ஆகியோர் தமது இருக்கைகளில் அமர்ந்து வழக்கு விசாரணையை ஆரம்பித்தனர்.

நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மூன்று வழக்குகளில் இரண்டுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது. (இ-16-5)

## 2 வழக்குகள் விசாரணை; தீர்ப்பும் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்ப்பாண நீதிமன்றத்தில் நேற்று எடுக்கப்பட்ட மூன்று வழக்குகளில் இரு வழக்குகளுக்கான தீர்ப்பு வழங்கப்பட்டது.

முதலாவது வழக்கில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்ட யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சிவன் கதிரேசன் என்பவர் இதே வீதியிலுள்ள கபாலி கபே கடையை உடைத்து 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்களை களவாடியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தார்.

அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் தண்டனையாக 600 ரூபா குற்றப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக். 24

பொன்னாலைப் பகுதியை நோக்கி நேற்றுக் காலை 7.30 மணியளவில் பீரங்கிப் படகுகளிலிருந்து கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். தொடர்ந்து காரைநகர் பகுதியில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை — பலாலி பகுதியில் இருந்தும் நேற்றுக் காலை இராணுவத்தினர் ஷெல் மற்றும் ஆட்லறிஷெல் தாக்குதல்களை நடத்தினர். (இ-15-18 5)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஒக். 24

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமையும நாளை திங்கட்கிழமையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

சக்கோட்டை கிராமத்தில்

## கையில் தீவெட்டியுடன் வெள்ளிஇரவு ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஒக். 24

போர்க்கால தீவெட்டி ஊர்வலமும், கருத்தரங்கும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு வடமராட்சி வடக்கு சக்கோட்டை கிராமத்தில் நடைபெற்றன.

தீவெட்டிகளைத் தாங்கியவாறு பெரும் எண்ணிக்கையான இளைஞர்களும், யுவதிகளும் கோஷங்களை ஒலித்தவாறு ஊர்வலமாகச் சென்றனர்.

சக்கோட்டையில் இருந்து இன்பருட்டி வரை ஊர்வலம் சென்றது. கடற்புலிகளின் அரசியல் வகுப்புக் கல்விப்பொறுப்பாளர் மு. வே. யோ. வாஞ்சிநாதன், வடமராட்சி வடக்கு கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சங்கீதன் ஆகியோர் ஊர்வலத்தை தொடக்கிவைத்தனர்.

ஊர்வலம் சக்கோட்டை தேவாலயத்துக்குச் சென்ற பின் அங்கிருந்து மாவீரர் நினைவுத் தூபியை சென்றடைந்தது.

ஊர்வலத்தில் சென்றவர்கள் தாங்கிச் சென்ற தீப்பந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

மழை காரணமாக

## கப்பலிலிருந்து பொருள் இறக்குவதில் தாமதம்

வடமராட்சி, ஒக். 24

பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் மழை காரணமாகத் தாமதம் அடைந்துள்ளன.

நேற்றுக் காலை வாதுவ கப்பல் காங்கேசன் துறையில் இருந்து வழமையான நேரத்தில் பருத்தித்துறையை வந்தடைந்த போதிலும் நண்பகல் 12.00 மணிக்குப் பின்னரே முதலாவது இழுவைப் படகு (பாஜ்) பொருள்களுடன் இறங்கு துறையை வந்தடைந்தது. (இ-173)

## ஸ்ரீநகர் துப்பாக்கிச் சூடு குறித்துநீதிவான்விசாரணை

### 37 பேர் வரை பலி

ஸ்ரீநகர், ஒக். 24

காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது 37 பொது மக்கள் இந்திய ராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக நீதிவான் விசாரணைக்கு காஷ்மீர் அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்தக் கோரச் சம்பவத்தைப் பூரணமாக விசாரித்து அறிக்கை ஒன்றை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கும்படி நீதிவானுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. (க)

மீண்டும் போர் மேகம் சூழ்கிறது.
வான் பரப்பில் யுத்த விமானங்கள்
கடல் பரப்பில் பீரங்கிக் கப்பல்கள்
நிலப் பரப்பில் கவச வாகனங்கள்
தமிழா எழு !
எழுந்திரு இல்லையேல் பெரும்பழி
எதிரிக்கு வெட்டுவோம் புதைகுழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உயர் கல்லூரியினால்

நடத்தப்படும்

## வாணி விழா அழைப்பு

காலம்: 24 — 10 — 1993 (ஞாயிறு)

### பட்டி மண்டபம்

**தலைப்பு**

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில்
தனியார் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு
முழுமையானது; முழுமையற்றது

நடுவர்
திருமதி ச. அருள்நங்கை

முழுமையானது

திரு. நா. குழந்தைவேல்
திரு. சோ. பத்மநாதன்
திரு. ஆ. பிறிற்றோ

முழுமையற்றது

திரு. ஆ. குமாரவேல்
திரு. ச. சண்முகராசா
திரு. இ. மகேந்திரன்

அன்பர், ஆர்வலர், பழைய மாணவர்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**புதிய உயர் கல்லூரி**
மாணவர்கள், ஆசிரியர்கள்,
விரிவுரையாளர்கள்.

அதிபர்
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி/6435)

## நூல் வெளியீடு

நாவலர் வீதி புதிய கல்வி நிலையத்தின் இன்று "ஆண்டு 5 புலமைப்பரிசில் பயிற்சி நூல்" வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற உள்ளது.

கல்வி நிலைய நவராத்திரி விழாவில் இடம்பெறும் நூல் வெளியீட்டு நிகழ்வில் சங்கானை பிரதேச செயலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. செ. தேவதாசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். விழா பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். (அ-த)

## 2 வழக்குகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பணமாக கட்டுமாறும் தவறின் ஒரு மாத கட்டாய சமூக சேவை செய்யுமாறும் நீதிபதியால் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

இரண்டாவது வழக்கில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்ட குமரன் மகேந்திரன் என்பவர் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் உள்ள தம்பிஐயா புனிதவதிக்கு சொந்தமான கடையை உடைத்து 1500 ரூபா பெறுமதியான பொருட்களை களவாடியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

அவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் தண்டனையாக 800 ரூபா குற்றப் பணமாக கட்டுமாறும் தவறின் ஒரு மாத கட்டாய சமூக சேவை செய்யுமாறும் நீதிபதியால் தீர்ப்பு அளிக்கப்பட்டது. (இ-162)

சுன்னாகம்
ஸ்ரீ சந்திரசேகர விநாயக தேவஸ்தான
புனராவர்த்தன சம்புரோக்ஷண

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கருமாரம்பம் 25 — 10 — 1993
காலை 6.00 மணி

எண்ணெய்க் காப்பு 27 — 10 — 1993
காலை 6.00 — மாலை 3.00 மணி வரை

மஹா கும்பாபிஷேகம் 28 — 10 — 1993
காலை 9.38 தொடக்கம்
நண்பகல் 11.34 வரை

பிரதிஷ்டாகுரு வேதாகம கிரியார்த்தனம்
பிரம்மஸ்ரீ சோ. சந்திரகாந்தக் குருக்கள்

சபா. சோமஸ்கந்தக் குருக்கள்

சந்திரசேகர விநாயகர் தேவஸ்தானம்,
சுன்னாகம். (சி-2037)

## பாராட்டு விழா

காலம்: 24 - 10 - 1993 மாலை மணி 6.45
ஞாயிற்றுக்கிழமை

16 - 10 - 1993 முதல் 24 - 10 1993 வரை கோண்டாவில் விநாயகர் ஆலயத்தில் "தேவி மாகாத்மியம்" என்னும் பொருள் பற்றி தொடர் சொற்பொழிவு ஆற்றிய "சிவநெறிக்காவலர்", "அறநெறித்தொண்டர்"

**திரு. செ. சத்தியமூர்த்தி B. A.**
அவர்களைப் பாராட்டி கௌரவித்தல்

நிகழ்ச்சிக்குத் தலைமை:
ஆசிரியமணி ஆர். சி. சுப்பிரமணியம்

பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பவர்:
"சிவத்தமிழ் வித்தகர்" திரு. சிவமகாலிங்கம்
விரிவுரையாளர்

பாராட்டு உரை:
திரு. க. சி. சண்முகம் (ஓய்வு பெற்ற அதிபர்)

நன்றி உரை:
ஆலயகுருக்கள் சி. இராஜசேகரக் குருக்கள்

இங்ஙனம்,
தேவஸ்தானம்.

விளம்பர அன்பளிப்பு:
**ஆறுமுகம் சிற்பாலயம்,**
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(சி-6482)

# இலவச பற்சிகிச்சை

## (FREE DENTAL SERVICE)

தமிழீழ மக்களின் நலன் கருதி பின்வரும் தினங்களில் எமது வைத்தியசாலையில் இலவச பற்சிகிச்சை அளிக்கப்படும்.

24 — 10 — 93
31 — 10 — 93
07 — 11 — 93
14 — 11 — 93
— ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை

### எமது ஏனைய சேவைகள்

(சலுகைக் கட்டண அடிப்படையில்)
CONCESSION RATE

- ★ அனுபவம் நிறைந்த வைத்தியர்களின் 24 மணிநேர வெளி, உள் நோயாளர் சேவை (24 HOURS SERVICE)
- ★ சகல துறைகளிலும் வைத்திய நிபுணர்களின் ஆலோசனை (SPECIALIST CONSULTATION)
- ★ சத்திர சிகிச்சை வசதி (OPERATION THEATRE FACILITY)
- ★ மகப்பேறு கூட வசதி (MATERNITY SECTION)
- ★ பற்சிகிச்சை வசதி (DENTAL SURGERY)
- ★ ஆய்வு கூட பரிசோதனை வசதி LABORATORY FACILITY)
- ★ ஈ.சி.ஜி (E C G)
- ★ விசேட மருத்துவ விடுதிகள் (SPECIAL WARD)
- ★ இரவு / பகல் மருந்தக சேவை (DAY & NIGHT PHARMACY)

"எம் கடன் பணி செய்வதே"

## வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை
## WILLIAM HARVEY PRIVATE HOSPITAL

இல. 17, கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

NO. 17, KANDY ROAD,
CHUNDUKKULI,
JAFFNA.

(6556)

## 31 ஆம் நாளின் நீங்கா நினைவு

### திருமதி சொக்கலிங்கம் நாகம்மா
(7 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.)

மண்ணில் :- 22-09-1912
விண்ணில் 24-09-1993

திதி:- 24-10-1993

எங்கள் வாழ்வின் அணையாத தீபமாய் என்றும் ஒளி வீசிய அன்புத் தாயே. அன்பாலும் பண்பாலும் ஒன்பது செல்வங்களை கண்ணை இமை காப்பதுபோல் காத்தாயே எம்மை வழி காட்டி வாழ்வளித்த திருவிளக்கே. ஏனம்மா பிரிந்து விட்டாய் ஏங்குகின்றோம் ஆறாத துயரம்மா ஆண்டுகள் பல போனாலும் எம் இதயங்களில் உங்களை இருத்தி என்றும் பூசித்திடுவோம்.

உங்கள் பிரிவால் வாடும்

கணவன், மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

மகள்:- திருமதி தவராசா சகுந்தலாதேவி
(பளை ஆசிரிய கலாசாலை மாணவி.)

9, 1 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (27765)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் அவசர அமெரிக்க விஜயத்தின் பின்னால் இரண்டு பிரதான நோக்கங்கள்

ஸ்ரீலங்காவின் இளம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா செப்டம்பரில் ஆரம்பமாகி உள்ள பொது நலவாய நாடுகள் மாநாட்டுக்குச் சென்றுள்ளார். ஸ்ரீலங்காவின் தலைவர் இப்போது ஜனாதிபதி தான். 1978 ஆம் ஆண்டின் ஜே. ஆர். அரசமைப்புப் பிரகாரம் பிரதமர் இரண்டாம் [illegible]யில்.

ஆயினும் பிரேமதாசாவை அடுத்து, டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதிப் பதவியை ஏற்ற பின்னர், நாட்டுத் தலைவன்

**அரசியல்**

என்ற வகையில் அவர் இன்னும் வெளிநாட்டு விஜயம் எதனையும் மேற்கொள்ளவில்லை.

இந்தியாவுடனான உறவுகளை நெருக்கமுறச் செய்வதற்கான முக்கிய பணியும் ரணில் விக்கிரமசிங்காவிடமே கொடுக்கப்பட்டது. இந்தியா சென்ற அவர் உயர்மட்டத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார். வெற்றிகரமான விஜயம் என்ற இருதரப்புகளாலும் வர்ணிக்கப்பட்டது.

பிரேமதாசா காலத்தில் ஸ்ரீலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான உறவு பெரிதும் விரிசல் நிலையிலேயே இருந்தது. இந்திய இராணுவத்தை அடித்துத் துரத்துவது போல, [illegible] நிர்ணயித்து வெளியேறுமாறு பிரேமதாசா பிரகடனம் செய்ததோடு, இந்திய கடும் சீற்றம் கொண்டது.

## இனப்பிரச்சினையில் வெளியார் தலையீட்டை தடுத்துத் தவிர்ப்பதும் அதில் ஒன்று!

தமிழர் பிரச்சினையை தான் நினைத்தது போல தீர்ப்பதற்கு, தீர்வைத் தமிழர் மீது திணிப்பதற்கு இந்தியாவின் உதவியைப் பயன்படுத்தியவர் கிழவர் ஜே. ஆர். அதன் பொருட்டு இந்தியாவுடன் நல்லுறவு தேவை என்பதனை உணர்ந்து, அறிந்து, அதற்கேற்றாற் போல தனது பக்கக் காய்களை நகர்த்திக் கொண்டார். அந்த அரசியல் பெரும் நரி.

அதே பாணியைப் பின்பற்றி, அல்லது அதே நோக்கத்துடன் இந்தியாவுடனான கடும் போக்கை தணித்து நல்லுறவை உண்டாக்கும் முயற்சிகளில் பிரேமதாசா ஈடுபட்டு வந்தார். சிங்கள பௌத்த பேரினவாதத்தின் குறிக்கு உகந்ததான ஒரு தீர்வைத் தமிழர்கள் மீது திணிப்பதற்கு இந்தியாவுடனான நெருங்கிய நட்புத் தேவை என்ற நிலைப்பாட்டுக்குத் தன்னை மாற்றிக் கொண்டார்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பவர் போல நடித்துக் கொண்ட அதேவேளை, சிங்களப் பேரினவாதத்தின் அபிமானத்துக்குரிய தலைவனாக விளங்க வேண்டும் என்பது பிரேமாவின் நோக்கமாக இருந்தது. அத்தகைய ஒரு பாத்திரத்தில் திறம்பட நடித்தால் மட்டுமே, இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாகச் சிம்மாசனம் ஏற முடியும் என்பது அவரது கணக்காக அமைந்தது.

சிங்களவர்களின் உயர் குழாமைச் சேராத பிரேமதாசாவுக்கு, அடிமட்டத்தில் இருந்து சொந்த முயற்சியாலும், கடின உழைப்பாலும் மக்கள் தலைவனாக உயர்ந்த பிரேமதாசாவுக்கு, தனது தலைமைத்துவத்தின் ஆயுளை நீடிப்பதற்கு சிங்களப் பேரினவாதத்தின் நிறைவான ஆதரவு தேவைப்பட்டது.

அது போலவே தமிழர் பிரச்சினையை தீர்ப்பவர் போலக் காலத்தை ஓட்டுவதற்கு இந்தியாவின் நட்புக் கரம் தேவைப்பட்டது. அந்த நாடகத்தின் ஓரங்கமாகத் தான் அவர் இந்தியாவுடனான கடும் போக்கைத் தளர்த்தினார். அது விடயத்தில் நெகிழ்ச்சியைக் காட்டினார்.

இறப்பதற்கு முன்னர் இரு தடவைகள் அவர் மேற்கொண்ட இந்திய விஜயங்கள் நட்புக்கரம் நீட்டுவதற்கான சமிக்ஞைகளாக அமைந்தன. ஆனால் அவரது மரணத்துடன் அந்தச் சமிக்ஞைகள் [illegible] கீழ விழுந்தன போலாயிற்று.

பிரேமாவைத் தொடர்ந்து விஜேதுங்கா பதவிக்கு வந்த

— உதயகாந்தன் —

பின்னர் ஸ்ரீலங்கா எந்தத் திசையில் நடக்கப் போகிறது என்பதை இந்தியா வெகு உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தது. விஜேதுங்காவைப் பயன்படுத்தி ரணிலை முன்னுக்குக் கொண்டு வருவதென்ற நாய்ப் பாலிசி அடிப்படையாகக் கொண்டு, இந்தியாவின் கையை இறுக்கமாகப் பற்றி

(7 ஆம் பக்கம் பார்க்க)

**சூரியகாந்தி**
**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

# தெற்கில் வாழும் தமிழர்கள் எல்லோருமே பொலீஸார் கண்ணில் சந்தேகப் பிராணிகள்!

தமிழ் தாயகத்தில் வாழும் தமிழ் மக்களை குண்டு வீசியும், எறிகணை எறிந்தும் அவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துப் பலவீனமாக்கும் முயற்சியில் அரசு கடந்த மூன்றரை வருடங்களாக ஈடுபட்டு வருகிறது.

கொழும்புக்கும், ஏனைய தென்னிலங்கை பிரதேசங்களுக்கும் சென்றால் இந்த அழிவிலிருந்து தப்பலாம் என்று நினைத்து நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போன தமிழர்கள் இப்போது நாளுக்கு நாள், மணிக்கு மணி அணு அணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

1983 ஆம் ஆண்டின் பின்னர் கூட, கொழும்பின் சுகபோகத்தையும் வசதியான வாழ்க்கையையும் கருதி அங்கேயே சிங்களவர்களுடன் வாழ்பவர்களுக்கு மீண்டும் நெருக்கடி வந்திருக்கிறது. அது ஒரு கழுத்துப் பிடிதான்!

இந்த இரண்டு ரகத்தினர் மட்டுமன்றி தாயகத்திலுள்ள தமது பிள்ளை குட்டிகளுக்கும், குடும்பங்களுக்கும் சோறு போடுவதற்கு கொழும்பில் உழைக்க வேண்டிய கட்டாயம் உள்ளவர்களும் பொலீஸாரின் கையிலும், படையினர் கையிலும் சிக்கிச் சீரழிய வேண்டிய நிலை.

தமிழர் தாயகத்திலிருந்து 'தப்பிவிட' நினைத்துப் போனவர்களாயினும் சரி, கொழும்பிலேயே பிறந்து வளர்ந்து சிங்களவர்களாக நடித்தவர்களாயினும் சரி, உழைப்பதற்காகச் சென்றவர்களாயினும் சரி பொலீஸாரையும் அரசாங்கப் படையினரையும் பொறுத்தவரையில் அவர்கள் எல்லோரும் தமிழர்களே! சந்தேகப் பேர்வழிகளே!

சிங்கள மக்களின் நம்பிக்கையை பெறவேண்டும் என்பதற்காகவும் ஐக்கிய தேசிய கட்சியே தொடர்ந்து அரசாள வேண்டும் என்பதற்காகவும், சிங்கள மக்களை ஏமாற்றுவதற்காகவும் தமிழர்களைக் கைது செய்யும் கைங்கரியம் தொடர்வதாகச் சிலர் காரணம் கூறுகிறார்கள்.

## ஒவ்வொரு நிமிடமும் அச்ச உணர்வுடன் கழிகிறது

தொடரும் கைதுகளால், வீதிகளில் தமிழ் இளைஞர்களின் சடலங்கள் காணப்படுவதால் தெற்கில் வாழும் தமிழ் மக்கள் எந்த நேரம் என்ன நடக்கும் என்பது தெரியாமல் மிகுந்த பதற்றத்துடன், வாழ்ந்து கொண்டிருக்கிறனர். சிங்கள மக்களுடன் நீண்ட காலம் இணைந்து வாழ்ந்தவர்களும், அரச அலுவலகங்களில் உயர் பதவி வகிப்பவர்களும், சிங்கள யுவதிகளை மணந்தவர்களும் கூட இன்று தாம் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்று ஏங்கித் தவித்தவண்ணம் உள்ளனர்.

அரச அலுவலகங்களில் உயர் பதவி வகிக்கின்ற தமிழர்கள் கூட இன்று பொலீஸாரினால் சந்தேகக் கண்களுடனேயே நோக்கப்படுகின்றனர். அலுவலகங்களில் உயர் பதவிகளை இவர்கள் வகித்தாலும் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களினாலும், சிற்றூழியர்களினாலும் அவமதிக்கப்படுகின்றனர்.

### எங்கும் எப்போதும் கைது

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இன்று வகை வித்தியாசமின்றி தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் நடுநிசியிலும் பகல் நேரத்திலும் விடுதிகளிலும், வீதிகளிலும், வீடுகளிலும் வைத்து காரணம் கூறாமலே கைது செய்யப்படுகின்றனர். இன்று கொழும்பு மாவட்டம் முழுவதிலும் தமிழர்கள் கைது செய்யப்படுவது சர்வசாதாரணமாகிவிட்டது. தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்ற முகத்துவாரம், கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெஹிவளை ஆகிய இடங்களில் கைது செய்யும் படலம் தொடர்ந்து இரவும் பகலும் நடந்து கொண்டேயிருக்கின்றன.

### சிங்களத்தில் கதைத்தால் அடி

விடுதிகளுக்கும், வீடுகளுக்கும் நடுநிசியில் செல்கின்ற பொலீஸார் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் தமிழர்களைத் தட்டி, அதட்டி எழுப்புகின்றனர். அரசாங்க அலுவலர்களாக இருந்தாலென்ன கொழும்பிலேயே பிறந்து வளர்ந்தவர்களாக இருந்தாலென்ன, வியாபாரிகளாக இருந்தாலென்ன, வயது வித்தியாசமின்றி ஆண்கள் பெண்கள் அனைவரையும் படுக்கையில் இருந்த உடுப்புடன் எந்த விதமான விசாரணையுமின்றி கைது செய்கின்றனர். ஏன் காரணம் கூறியும் தப்பிக்கொள்ள முடியாதவாறு வாகனங்களில் ஏற்றிக் கொண்டு செல்கின்றனர். கைது செய்யும் போது யாரும் பொலீஸாருடன் தெரிந்த சிங்களத்தில் கதைத்தால் கிடைப்பது அடியும் உதையும் தான்!

கைது செய்யப்படும் அனைவரும் பொலிஸ் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். பொலிஸ் நிலையங்களில் பத்துப்பேர்கள் கூட தங்க முடியாத சிறைக்கூடங்களில் நூற்றுக்கணக்கானோர் அடைத்து வைக்கப்படுகின்றனர். பெண்களை தனியான இடங்களில் அடைத்து வைக்கின்றனர்.

### வாக்காளர் இடாப்புடன் வருகின்றனர்

கொட்டாஞ்சேனையிலுள்ள தொடர்மாடிக் கட்டடம் ஒன்றில் பல வருடங்களாக வாழும் தமிழ்க் குடும்பத்தினர்கள் அண்மையில் கொட்டாஞ்சேனை பொலிஸாரினால் துருவித் துருவி விசாரணை செய்யப்பட்டனர். இந்தக் குடும்பம் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்ற பொலீஸார் வாக்காளர் இடாப்பு அட்டவணையையும் எடுத்துச் சென்றனர். வாக்காளர் இடாப்பில் உள்ள பெயர்களை அடுக்கடுக்காக வாசித்து ஒவ்வொருவரும் எங்கே என்று வயதானவரான பெரியவரைக் கேட்டனர். பெரியவர் தனக்குத் தெரிந்த விளக்கத்தில் பதிலளித்தார். ஒரு இளைஞரின் பெயரும் வாக்காளர் இடாப்பில் இருந்தது. அந்த இளைஞர் எங்கே என்று பொலீஸார் கேட்டனர். அவர் வெளிநாடு சென்று விட்டார் என்று பெரியவர் கூறினார். ஆனால் பொலீஸார் நம்பவில்லை. அவரை தீவிரமான விசாரணைக்குட்படுத்தினர். வயோதிபர் எவ்வளவோ சொல்லியும் பொலீஸார் கேட்கவில்லை மகன் எழுதிய கடிதத்தைச் சமர்ப்பித்தும் பொலீஸார் நம்ப மறுத்தனர். "உமது மகன் புலி இயக்கத்துக்கு யாழ்ப்பாணம் சென்று விட்டான்" என்று கூறி அந்த வயோதிபரை பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிச் சென்று அடைத்து வைத்தனர். பல தஸ்தாவேஜுகள், கடிதங்கள், புகைப்படங்களைக் காட்டிய பின்னர் மூன்று நாட்கள் முடிந்து விடுவித்தனர். ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் உள்ள சிறைக் கூடங்களில் ஆடு, மாடுகளைப் போல தமிழர்கள் அடைத்து வைக்கப்படுகின்றனர். இந்த சிறைக் கூடங்களில் இவர்கள் இரவு முழுவதும் நின்று கொண்டே நேரத்தைக் கழிக்க வேண்டும்.

வெளிநாடுகளுக்கு பயணமாவதற்கு ஆயத்தம் செய்தவர்களும், விடிந்தால் விமானத்தில் பறக்க வேண்டியவர்களும் இவர்களில் பெருமளவில் அடங்குவார்கள்.

### வீதித் தடைகள்

விடுதிகளிலும், வீடுகளிலும் தப்பித் தவறி கைது செய்யப்படாமல் எஞ்சியிருக்கும் தமிழர்கள் தமது அலுவலகங்களுக்கும் வியாபாரத் தலங்களுக்கும், முக்கிய கடமைகளுக்கும், மினி பஸ்கள்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

— வி. ரி. கதிர்காமநாதன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இந்தியாருடே, ஆண்டு மலர் 93-94 (முத்தமிழ் இலக்கிய விருந்து), உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள். தீபாவளிச் சார்ட் வகைகள் மொத்தமாகக் கிடைக்கும். லக்ஷ்மி புத்தகசாலை, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (இ-6430)

தரமான மிகச் சிறந்த இசைக் குழுவிற்கேற்ற சால் வெட் ஆர்மோனியம், இந்திய சுருதிப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: த. சிவசண்முகமூர்த்தி, ஆசிரியர், தொண்டைமானாறு. (27757)

ஆடை லேக்கன் கடிய நல்ல இன கோழி முட்டைகளும், லக்கம் கோழி முட்டைகளும் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (27761)

### உடன் விற்பனைக்கு

ஹாலோகேன்கள், டைனமோ, போல்கள், சாமான்கள், இன்க் கோழிகள் (சுருப்பு, வெள்ளை) வெள்ளாடுகள், சாவகச்சேரி மற்றும் நல்லினக் கோழிகள் மொத்தமாக கூட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ராதா - மாஸ்டர், நுணாவில் மத்தி, சோதி நாதன் வீதி, (ஐயர் - லேன்) சாவகச்சேரி. (6552)

### மகாதேவா ஜோதிடம்

உண்மையான பலனை அறியலாம் இல. 229, ஆஸ்பத்திரி வீதி, காலை 10.00 — 1-00 மணி இல. 140, செல்வச் வீதி, கன்னியமாடு. பிற்பகல் 3-00 — 6-00 வரை சந்திக்கலாம். (27711)

### ஆனந்தக் சியாக்காய்

சித்த மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பட்ட ஆனந்தச் சீயாக்காய்ப் பவுடர், பேன், பொடுகு, அழுக்கு அகற்றி சுகமாழ்விற்கு உகந்தது. மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்குமிடம் குகன் - ஸ்ரோர் - யாழ்ப்பாணம், கனகா பத்திரிகை விற்பனை நிலையம், திருநெல்வேலி, பிரபல வர்த்தக நிலையங்கள் - சாவகச்சேரி. (6553)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்கள்! ஜாதகம், கைரேகை, எண்விஞ்ஞானம், சாமுத்திரிகா லட்சணம் அனைத்துக்கும் தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (முடமாவடிச் சந்தி) (27727)

### மிருதங்கம்

இரண்டு நாங்களுக்குள் தோல் வாத்தியங்கள் ஆவும் சுத்தமாகச் சாதம் போட்டுத் தரப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் இல. 198/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (27710)

### G. C. E. (A/L) - 94

மேற்படி G.C.E. (A/L) 94 வகுப்பிற்கான கலை, வர்த்தக 98ஆம் ஆண்டு புள்ளி வழங்கல் திட்டம் விற்பனையாகிறது. அதிவசக் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (இ-6487)

### மணமகள் தேவை

அவுஸ்திரேலியா விசா ஒழுங்குள்ள 42 வயது ரெக்னீஷியனுக்கு பிரயாணச் செலவை ஏற்று இரண்டு வாரத்திற்குள் மணந்து கொழும்பு வரக்கூடிய மணமகள் தேவை. சுயமாக ஆங் கிலத்தில் (விதவை, பிரிந்து வாழ்பவர், பொறுப்பற்றவர் உட்பட) ஐந்து தினங்களுக்குள் தெளிவான விலாசத்துடனும், விபரத்துடனும் விண்ணப்பிக்கவும். மே/பா 21, உதயன் சேவை நிலையம், 82, கே.கே. எஸ். வீதி, சுன்னாகம். (6699)

### வாடகைக்கு

12 பரப்பு தோட்டக் காணி சகல வசதியுடன் வீடு, இருபது தென்னை மரங்கள், மா, வாழை பிரயோசனங்களுடன் ஒற்றிமுறையில் ஐந்து வருடங்களுக்கு கொடுக்கப்படும். எஸ். கனகரட்ணம், சி. சி. பாடசாலைக்கு அருகில் நீர்வேலி. (27734)

### நுளம்புத் தொல்லையா?

இரவில் நீம் தூபம் புகைக்கிறோம். நிம்மதியாக நித்திரை கொள்கிறோம். எமக்கில்லை நுளம்புத்தொல்லை. பாவியுங்கள் "நீம் தூபம்" பக்கற் ஒன்று ரூ 8/- 25 பக்கற் கொண்ட அட்டை ரூபா 60/- மட்டுமே. அனைத்து கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. 'மிக்கிவைற்' (சி-6261)

### இலவச திருமண சேவை

28, அக்கினி, B. A. ஆசிரியைக்கு குறைந்த செவ்வாய் பாவமுள்ள அரசாங்க உத்தியோகத்தர் விரும்பப்படுகிறார். எதிர்காலம் சிறப்புற நாடுங்கள் இலவச திருமண சேவையை. ஞாயிற்றுக்கிழமைகளில் த. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (27730)

### O/L கணிதம் 93

வினா-விடை திருத்தல் மூலமும் ஆரம்பத்திலிருந்து அடிப்படை முறைப்படியும் Distinction, Credit பெறுபேறடைய இது வரையும் சித்தியடையாதவர்களும் B. Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல, 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (27764)

### தேவை

நல்ல நிலையில் உள்ள சாவி மோட்டார் சைக்கிள், விற்பனைக்கு இருந்தால் கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு உடன் தொடர்பு கொள்ளவும். 52/7, காவி கோவிலடி கொண்டாவில் மேற்கு, கொண்டாவில். மே/பா 20, உதயன் சேவை நிலையம், 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (6698)

### (O/L) MATHS

Distinction பெறுபேறடைவதற்கு 26 வருட அனுபவம் உடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து சகல Sectionகளும் Portionகளும் நிறைவேற்றப்பட்டு Section & Portion Revision உடன் Past Papers Practiceம் அளிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, ஜோசேந்திர வீதி, சுண்டிக்குளி. (6543)

### யாழோசை வகுப்புகள்

சகல புதிய இசை வகுப்புகளும் விஜயதசமி அன்று (24-10-93) காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். யாழோசை, 61, வருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (27680)

---

பட்டப்பின்
கல்வித் தகைமை
கற்கை நெறி
1992/93

## நேர்முகப்பரீட்சை

பட்டப்பின் கல்வித் தகைமைப் பரீட்சையிற் சித்தியடைந்த ஆசிரியர்களுக்குரிய நேர்முகப் பரீட்சை நவம்பர் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்நேர்முகப் பரீட்சை தொடர்பான கடிதங்கள் பரீட்சையிற் சித்தியடைந்தவர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. இவர்களின் பெயர்ப் பட்டியல் சொல்வது பல்கலைக்கழக அறிவித்தற் பலகையிலும் இடப்பட்டுள்ளது.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் -
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
20-10-1993

(இ-6269)

---

மீண்டும் வெளிவந்துள்ளது

மஹாலக்ஷ்மி அச்சகப் பிரசுரமாக!

## MAHALUXMI PRESS

105 ஆங்கில கட்டுரைத் தொகுப்பு

105
COMPOSITION MODELS
IN ENGLISH
FOR ALL PUBLIC EXAMINATIONS
REVISED EDITION

ஆக்கியோன்: த. ந. பஞ்சாட்சரம்
விலை ரூபா 125/-


கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை,

(27756)

---

## 100ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 05 — 07 — 1930



மறைவு: 17 — 07 — 1993

### அமரர் தே. செல்வநாயகம்

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எம் தெய்வமே! குடும்ப விளக்கே! உங்கள் மதிமுகமும், சொல்லும், செயலும் எங்களால் மறக்க முடியுமா? நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து நாட்கள் நூறு சென்றாலும், உங்கள் நினைவுகள் எங்கள் மனங்களை விட்டு அகலவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இறுதிக் கிரியையில் கலந்து கொண்டும், உதவி புரிந்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி.

கொழும்பு. (6700)

---

உ

சிராம் விக்னப் பிரம்மணே நம:

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் ஐப்பசி மாதம் ஒன்பதாம் நாள் நாளை (25-10-1993) திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணி தொடக்கம் 1-30 மணிவரையுமுள்ள
★ சுபமுகூர்த்தத்தில் ★

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **ஸ்ரீ முருகன் (ஸ்ரீ)** (மோட்டார் சைக்கிள் மெக்கானிக்) அவர்களுக்கும் | எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **அமுதரஞ்சனா (அமுதா)** அவர்களுக்கும் |

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான திருமண மண்டபத்தில் (நாச்சிமார் கோயிலில்) திருமணம் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து, மணமக்களை ஆசிர்வதிக்கும்படி
★ அன்புடன் அழைக்கின்றோம். ★

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்!

திரு. திருமதி செல்வரத்தினம்,
671/2, கே. கே. எஸ். வீதி,
புநாறி மரம் லேன்,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி குணரத்தினம்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(27748)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹஸ்ரத்பால் மசூதி முற்றுகையால் சூடுபிடிக்கும் காஷ்மீர் பிரச்சினை!

இந்தியாவையும் பாகிஸ்தானையும் கடந்த 46 வருடகாலமாக பதற்ற நிலையில் வைத்திருக்கும் காஷ்மீர் பிரச்சினை, ஹஸ்ரத்பால் மசூதி (Hazratbal) விவகாரத்தினால் மீண்டும் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீருக்காக 1947 ஆம் ஆண்டும் 1965 ஆம் ஆண்டும் இரு யுத்தங்களை நடத்தி உள்ளன.

1990 இல் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள ஆஸாத் காஷ்மீரில் (Azad kashmir) இருந்து இந்திய கட்டுப்பாட்டுப் பிரதேசமான ஜம்மு காஷ்மீருக்குள் (Jammu kashmir) பெரும் அணிவகுப்பு ஒன்றை நடத்த காஷ்மீர் பிரிவினைவாத ஆதரவுச் சக்திகள் முயன்ற போது மற்றும் ஒரு யுத்தம் மூளும் அபாயம் உருவாகி இருந்தது. எனினும் பின்னர் நெருக்கடி தணிந்தது.

இறை தூதர் முஹம்மது நபி அவர்களின் கேசம் ஒன்றைப் பாதுகாத்து வைத்திருப்பதாகக் கருதப்படும் ஹஸ்ரத்பால் மசூதி விவகாரம், இந்தியாவையும் பாகிஸ்தானையும் மற்றொரு யுத்தத்துக்கு இட்டுச் செல்லும் அளவுக்கு பாரதூரமானது அல்ல.

எனினும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் பாதிக்கப்படவும் — சமாதான முயற்சிகள் முற்றாக அற்றுப் போகவும் —

## தீர்வை நோக்கி நகர முடியாத நிலையில் இந்தியாவும் பாகிஸ்தானும்

**வெளி உலகில்**

இந்த விவகாரம் காரணமாக அமையலாம்.

பாகிஸ்தானின் புதிய பிரதமராக பெனாஸிர் பூட்டோ தற்போது மீண்டும் தெரிவான சமயம் இந்தப் பிரச்சினை உருவாகி இருப்பது துரதிர்ஷ்டமானதே.

பாகிஸ்தான் அரசியல் தலைவர்களில் இந்தியாவுடன் சமுகமான உறவை வளர்ப்பதில் அக்கறை காட்டி வருபவர்களில் பெனாஸிர் பூட்டோவும் ஒருவர் என்று கருதப்படுகிறது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் கோடை காலத் தலைநகரான ஸ்ரீநகரில் உள்ள நாகின் ஏரி (Lake Nagin) கரையில் அமைந்துள்ளதே ஹஸ்ரத்பால் மசூதி ஆகும்.

இந்த மசூதி சலவைக் கல்லினால் கட்டப்பட்ட வெள்ளை நிறத் தூபியைக் கொண்டது. நான்கு வாசல்கள் இதற்கு உண்டு.

இந்த மசூதி கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக இந்தியப் படைகளின் சுற்றிவளைப்புக்கு உள்ளாகி இருந்து வருகிறது.

மசூதிக்குள் சுமார் 70 வரையிலான முஸ்லிம் தீவிரவாதிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் சுற்றிவளைப்புக்கு முன்னர் பிரார்த்தனைக்காக மசூதிக்குள் சென்ற முஸ்லிம் யாத்திரிகர்களும் தற்போது வெளியேற முடியாதவாறு மசூதிக் கட்டடத்துக்குள் சிக்கிக் கொண்டுள்ளனர்.

மசூதியில் உள்ள புனித சின்னமான முஹம்மது நபியின் கேசத்தை திருட முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றும் —

முஸ்லிம் தீவிரவாதிகள் மசூதியை தமது ஆயுதக் கிடங்காகவும், அதிருப்தியாளர்களை அடைத்து வைத்து விசாரணை நடத்தும் மறைவிடமாகவும் பயன்படுத்துகின்றனர் என்றும் — இந்தியா குற்றஞ்சாட்டி வருகிறது.

மசூதியின் புனிதத்தைப் பாதுகாக்கவே இராணுவம் மசூதியை முற்றுகையிட்டது என்றும் இந்தியா தரப்பில் காரணம் கூறப்படுகிறது.

### மசூதியை தகர்க்க பயமுறுத்தல்

ஆனால் மசூதிக்குள் இருந்து வரும் முஸ்லிம் தீவிரவாதிகள், மசூதிக்குள் இந்திய இராணுவம் நுழைந்தால், மசூதியைத் தகர்த்துவிடப் போவதாகப் பயமுறுத்தி வருகின்றனர்.

புனித சின்னமான முஹம்மது நபிகளின் கேசம் மசூதிக்குள் இருப்பதை ஊர்ஜிதம் செய்ய முஸ்லிம் அறிஞர்கள் குழு ஒன்று மசூதிக்குள் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளையும் நிபந்தனைகளையும் முஸ்லிம் தீவிரவாதிகள் விடுத்துள்ளனர். தமது பாதுகாப்பான வெளியேற்றத்துக்கு அவர்கள் இந்திய அரசிடம் உத்தரவாதமும் கோரி உள்ளனர்.

### ஸ்ரீநகரில் பதற்றம்

இந்த விவகாரம் 8 லட்சம் மக்கள் வாழும் ஸ்ரீநகரில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

ஊரடங்கை மீறி மசூதியை நோக்கி பெரும் அளவில் அணி வகுப்புகளை நடத்த முஸ்லிம்கள் முயற்சித்து வருகின்றனர்; நேற்று முன்தினம் தலைநகர் ஸ்ரீநகரிலும் மற்றும் ஒரு நகரிலும் இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் 38 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தியப் படைகளின் முற்றுகைக்கு உள்ளாகி இருக்கும் மசூதியை நோக்கி அணிவகுத்து வரும்படி மசூதிக்குள் இருக்கும் முஸ்லிம் தீவிரவாதிகள் விடுத்த அழைப்புக்கு பெரும் ஆதரவு இருந்து வருகிறது. மசூதிக்குள் இருந்துவரும் தீவிரவாதிகள் தாம் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை இதுவரை வெளிக்காட்டவில்லை.

### 70 தீவிரவாத இயக்கங்கள்

ஜம்மு காஷ்மீரில் 70 முஸ்லிம் தீவிரவாத இயக்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 15 இயக்கங்களே குறிப்பிடத்தக்கவை ஆகும். இவற்றிலும் ஜம்மு — காஷ்மீர் விடுதலை முன்னணியும் (Jammu and Kashmir Liberation Front) ஹிஸ்— உல் — முஜாஹிதீன் (Hizb - ul-Mujahideen) இயக்கமுமே பிரதானமானவை ஆகும். இந்த இயக்கம் பாகிஸ்தானுக்கு ஆதரவானது. சவூதி அரேபியாவும் ஈரானும் இதற்கு ஆயுதப் பயிற்சி அளித்து வருகின்றன.

ஜம்மு — காஷ்மீர் விடுதலை முன்னணி இந்தியாவிடம் இருந்து பிரிந்து சுதந்திர காஷ்மீர் அரசு ஒன்றை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டே செயற்பட்டு வருகிறது.

ஜம்மு காஷ்மீரின் ஒவ்வொரு முஸ்லிம் தீவிரவாத இயக்கமும் இந்தியாவிடமிருந்து பிரிந்து தனி நாடு அமைப்பதை அல்லது இந்தியாவிடம் இருந்து பிரிந்து பாகிஸ்தானுடன் இணைவதை நோக்கமாகக் கொண்டே இயங்கி வருகின்றன.

### 46 ஆண்டு கால பிரச்சினை

1947 ஆம் ஆண்டு இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரமடைந்தபோது உருவான பிரச்சினை தான் காஷ்மீர் பிரச்சினை ஆகும்.

காஷ்மீர் தமக்கே சொந்தம் என்று இருநாடுகளும் உரிமை கோரியதை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் சண்டை மூண்டது.

இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பகுதி ஜம்மு — காஷ்மீர் என அழைக்கப்பட்டு தொடர்ந்து இந்தியாவின் ஒரு மாநிலமாக —

அதுவும் இந்து நாடான இந்தியாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு மாநிலமாக இருந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

—சஞ்சாரன்—

**சூரிய காந்தி**
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# அறியாமை என்ற இருள் அகன்று அருள் ஒளி பரவும் நவராத்திரி

இத்தரைப் பூரணைப் பங்குனி கந்திரவாரம்
பயில்வசர் திமை திர்த்து
முத்திதரும் ஐப்பசி உத்திரத்தோடு மாநவமி
இவை மூன்றும் பச்சைத்
தந்தை மொழி உமைவிரதம்...

(உபதேசகாண்டம்)

சக்தி விரதங்களில் சிறந்தது நவராத்திரி. நவராத்திரம் என்னும் வடமொழி நவராத்திரி எனத் தமிழில் மருவி வழங்குகின்றது. ஒன்பது இரவுகள் என இது பொருள்படும். ஒன்பது நாட்களும் இரவில் அம்பிகைக்கு சிறப்பாகப் பூசை நடைபெறுவதால் இது நவராத்திரி என அழைக்கப்படுகின்றது. இதில் இருந்து சக்தியின் மகிமை தெற்றென விளங்குகின்றது. இறைவனையே இயக்குபவள் சக்தி தானே! சக்தியின்றிச் சிவம் இல்லை.

நவராத்திரி விரதம் புரட்டாதி மாதத்தில் அமாவாசையை அடுத்து வருகின்ற வளர்பிறைக் காலத்து ஒன்பது நாட்களிலும் பிரதமை முதல் நவமி வரையும் கொண்டாடப்படுகின்றது. சில இடங்களில் இது பத்து நாட்கள் கொண்டாடப்படுவதால் தசராத்திரி என்றும் தசரா எனவும் அழைக்கப்படுகின்றது. நவராத்திரி விழாவின் சிறப்பம்சம் கொலு வைத்தலாகும். வீட்டில் அழகான பொம்மைகளை வரிசையாக வைத்து அயலவர்களையும் நண்பர்களையும் அழைத்து குழந்தைகளும் பெரியவர்களும் மகிழ்வார்கள். விழாக்களின் முக்கிய நோக்கம் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகும். அந்த வகையில் பார்க்கும்பொழுது நவராத்திரி விழா இன்பத்தைப் பெருக்கும் விழாவாகவும் எழில் நிறைந்த விழாவாகவும் அமைகின்றது. மக்கள் மனம்விரும்பி கொண்டாடி மகிழும் விழா இதுவாகும்.

நவராத்திரி இருவகைப்படும். சித்திரை மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரையுள்ள ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுவது ஒன்று. இது வசந்த நவராத்திரி எனப்படும். (முன்னேஸ்வரம் திருத்தலத்தில் இது கொண்டாடப்படுவது) மற்றது புரட்டாதி மாதத்தில் வருவது; இது சாரதா நவராத்திரி எனப்படும்.

அன்னை பராசக்தி 'சக்தி' எனச் சிறப்பாக அழைக்கப்படுகின்றாள். அவள் அம்பிகை என்றும், தேவி என்றும் பராபரை என்றும் ஸ்ரீமாதா என்றும் சிறப்பாக அழைக்கப்படுகின்றாள். அவள் ஆத்தாள் அபிராமவல்லி அண்டமெல்லாம் பூத்தாள் புவிபடைக்காத்தாள் முக்கண்ணி அவளைத் தொழுதார்க்கு ஒரு தீங்கில்லையே என்று அபிராமிப்பட்டர் அருளியுள்ளார். ஆரணி, சனனி, ரோதயித்தி என்று விளங்கும் அம்பிகையை மலைமகளாகவும், அலைமகளாகவும், கலைமகளாகவும் நவராத்திரி நாட்களில் வழிபடுகின்றோம்.

அகிலமும், அனைத்து உயிர்களும் ஏன் ஆடும் அப்பனும் சக்தியினால்தானே இயங்குகின்றனர். எனவே சக்தியில்லாமல் இயக்கமில்லை, மூச்சில்லை, பேச்சில்லை, செய

(7 ஆம் பக்கம் பார்க்க)

வா. சிவராமலிங்கம்

## ஆற்றலை அளித்திடு!

வீரத்தின் தெய்வமே!
வேள்வி வென்று நடக்குது
மக்களும் மனைகளும்
மறவர்களும் மா வேள்வியில்!
ஆர்ப்பரிக்கும் அரக்கர்களை,
அடக்கிட வேண்டும்.
வெற்றி நிலைநாட்ட
வேண்டுமின்னும் வீரம்!
தந்திடு ஆற்றலை!
தரணியை எமக்காக்கிடு.

செல்வத்தின் தாயே!
சிதைப்போமென்பவரை,
தலைகுனிய வைத்து
தமிழ் மண்ணை,
வளமாக்கி வைக்க
வல்லமை தருபவளே!
உனது மண்ணின் வளங்கள்
உணவளிக்க வைத்திட
தந்திடு ஆற்றலை!
தரணியைக் காத்திடு

கல்வித் தாயே!
காவியமொரு புறம்
எழுதிக் கொண்டு
வீழும் உடலங்களையும்
வெட்டுப் புள்ளிகளையும்
தாண்டிக் கொண்டு,
தளராதுநிற்கும் எம்
சாதனை மலைகள்
உயர்ந்திட வேண்டி
உன் தாள் பற்றி நிற்கிறோம்.
கலைவாணியம்மா!
ஆற்றலை அளித்திடு.

— மீசாலையூர் கமலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹஸ்ரத்பால் மசூதி...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி) வருகிறது. பாகிஸ்தானின் கட்டுப்பாட்டுப் பகுதி ஆஸாத் காஷ்மீர் என அழைக்கப்பட்டு வருகிறது.

## சர்வசன வாக்கெடுப்பு

காஷ்மீரின் எதிர்காலம் குறித்து தீர்மானிப்பதற்காக காஷ்மீர் மக்களிடையே ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று 1948இல் ஐக்கிய நாடுகள் சபை ஆலோசனை தெரிவித்திருந்தது.

இதற்கு இந்தியா அப்போது இணங்கியது.

ஆனால் இதுவரை சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதற்கான எந்தவித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட காஷ்மீரின் சர்வசன வாக்கெடுப்பு முடிவுகள் இந்தியாவுக்கு சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஜம்மு காஷ்மீரும்— ஆஸாத் காஷ்மீரும் 1,200கிலோமீற்றர் எல்லையைக் கொண்டவை ஆகும். எல்லைப் பாதுகாப்புக்காகவும், முஸ்லிம் தீவிரவாதிகளை அடக்கவும் இந்தியா சுமார் 5 லட்சம் துருப்புக்களை ஜம்மு காஷ்மீரில் வைத்திருக்கிறது. நாள் ஒன்றுக்கு 60 லட்சம் டொலரை இதற்காக செலவிட்டு வருகிறது.

இந்திய ராணுவம் ஜம்மு காஷ்மீரில் பாலியல் வன்முறைகள், படுகொலைகள் சித்திரவதைகளில் ஈடுபடுவதாக அண்மையில் சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டி இருந்தது.

தற்போதைய ஹஸ்ரத்பால் மசூதி சுற்றிவளைப்பில் மட்டும் பத்தாயிரம் துருப்புக்களும், பரா இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர்.

## பொற்கோயில் பாபர் மசூதி

1991 இல் பதவிக்கு வந்த நரசிம்மராவ் அரசு கடந்த ஒரு வருடத்துக்குள் எதிர்நோக்கும் இரண்டாவது மத தீவிரவாதப் பிரச்சினை ஹஸ்ரத்பால் மசூதிப் பிரச்சினை ஆகும்.

இந்திராகாந்தியின் காலத்திலும் இப்படியான பிரச்சினை இருந்தது.

பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரஸில் உள்ள சீக்கியரின் பொற்கோவிலுக்குள் இந்தியத் துருப்புகள் நுழைந்து தாக்குதல் நடத்திய விவகாரம் பெரும் மத சர்ச்சையை அப்போது கிளப்பி இருந்தது. 1984 இல் இந்திரா காந்தி படுகொலை செய்யப்படுவதற்கும் இதுவே காரணமாக இருந்தது.

நரசிம்மராவ் அரசு கடந்த ஆண்டு எதிர்நோக்கிய பிரச்சினை பாபர் மசூதி பிரச்சினை ஆகும்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அயோத்தியில் முஸ்லிம்களின் வணக்கஸ்தலமான பாபர் மசூதி (Babri Mosque) இந்து தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டது. இதனை அடுத்து பம்பாயில் இடம்பெற்ற முஸ்லிம் எதிர்ப்புக் கலவரங்களில் 600 பேர்வரை கொல்லப்பட்டனர்.

பாபர் மசூதி தகர்ப்புச் சம்பவத்தின் போது பாகிஸ்தானின் உருவான இந்திய எதிர்ப்பு உணர்வுகள் ஹஸ்ரத்பால் மசூதி சுற்றிவளைப்பினால் தற்போது மீண்டும் தலைதூக்கி உள்ளன. பாகிஸ்தானில் இந்து ஆலயங்கள் இலக்காக்கப்பட்டுள்ளன.

## 1000 வருடங்கள் போராடத் தயார்

பாகிஸ்தானின் தற்போதைய பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் தந்தையாரான சுல்பிஹார் அலி பூட்டோவின் பதவிக் காலத்திலேயே காஷ்மீர் பிரச்சினை இரு நாடுகளின் உறவையும் பெரும் அளவில் பாதித்திருந்தது.

காஷ்மீருக்காக இந்தியாவுடன் ஆயிரம் வருடங்கள் யுத்தம் செய்யவும் தயார் என்று சுல்பிஹார் அலிபூட்டோ அப்போது அறிவித்திருந்தார்.

1977 ஆம் ஆண்டு ஸியா— உல் ஹக்கினால் பதவி கவிழ்க்கப்பட்ட பூட்டோ 1979 இல் தூக்கிலிடப்பட்டார்.

1988-இல் ஸியா— உல்ஹக்கின் மரணத்தின் பின்னர் பெனாஸிர் பூட்டோ பிரதமராகப் பதவி ஏற்ற பின்னர் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான முறுகல் நிலை சிறிது தணிந்தது. அப்போது இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து அந்த நாட்டுடன் சில ஒப்பந்தங்களையும் செய்திருந்தார். அதன்பின்னர் பதவிக்குவந்த வி பி சிங் காலத்திலும் பெனாஸிர் தனது சிறப்புத் தூதர் ஒருவரை டில்லிக்கு அனுப்பி இருந்தார்.

ஆனால் எல்லா முயற்சிகளும் பலனற்றவை என்றே தற்போது கருதப்படுகிறது.

அயோத்தி பாபர் மசூதி தகர்ப்பின்போது முன்னணியில் நின்று செயற்பட்ட இந்து தீவிரவாதக் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி அடைந்தால் காஷ்மீர் பிரச்சினை தீர்க்கமுடியாத ஒரு பிரச்சினையாக மாறிவிடும்.

லோகசபையில் முன்னர் இரண்டு ஆசனங்களுடன் இருந்த பாரதிய ஜனதா 1989 பொதுத் தேர்தலில் 88 ஆசனங்களையும், 1991 பொதுத்தேர்தலில் 119 ஆசனங்களையும் பெற்றது.

ராஜஸ்தானிலும், மத்திய பிரதேசத்திலும், உத்தரப் பிரதேசத்திலும், ஹிமாச்சலப் பிரதேசத்திலும் அடுத்த மாதம் நடைபெறப் போகும் சட்டசபைத் தேர்தல்கள் இதன் அரசியல் பலத்தை எடுத்துக்காட்டப் போகின்றன.

## கடும்போக்கு

நரசிம்மராவ் அரசு ஜம்மு காஷ்மீரில் இருந்த சிவிலியன் கவர்னரை நீக்கிவிட்டு கிறிஷ்ணராவ் (Krishnarao) என்ற ராணுவ கவர்னரை பதவியில் அமர்த்தி உள்ளது.

அத்துடன் எவ்வளவு காலத்துக்கும் அங்கு துருப்புக்களை வைத்திருக்கத் தயாராக இருப்பதாக அது அறிவித்துள்ளது.

அங்குள்ள பிரிவினைவாத இயக்கங்களிலும் எந்த ஓர் இயக்கத்துக்கும் பிரச்சினையை சமாதானமாகத் தீர்க்கும் நோக்கம் இல்லை. காஷ்மீர் பிரச்சினை தீவிரவாத இன — மத உணர்வுகளுடன் பின்னிப்பிணைந்திருப்பதால் தீர்வுக்கான சாத்தியங்கள் மிகத் தூரத்திலேயே இருக்கின்றன.

# தெற்கில் வாழும் தமிழர்கள்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி) ஓட்டோ மற்றும் வாகனங்களில் செல்லும் போது கைது செய்யப்படுகிறார்கள் சந்திக்கு சந்தி பொலீஸார், இராணுவத்தினர், கடற்படையினர் கூட்டாகவும், தனித்தனியாகவும் வீதித் தடை போட்டு வாகனங்களை மறித்து அவற்றில் செல்வோரைச் சோதனை என்ற பெயரில் கைது செய்கின்றனர்.

கைது செய்யப்படும் போது யாரும் தமது நிலைமை, அந்தஸ்து, செல்வாக்கைக் கூறினால், ''பொலீஸ் நிலையங்களில் வந்து பேசுங்கள்; இங்கு யாரும் ஒன்றும் கதைக்க வேண்டாம்'' என்று பயமுறுத்தப்படுகிறார்கள். அடிப்போம் உதைப்போம் என்று மிரட்டப்பட்டு பொலீஸ் நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

## வீதியில் நிற்கும் தமிழ் அதிகாரிகள்

கொழும்பிலுள்ள அரசாங்க திணைக்களம் ஒன்றில் கடமையாற்றும் உயர் அரச அதிகாரி ஒருவர். ஒரு நாள் தனது வாகனத்தில் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருக்கும் போது ஆமர் வீதிச் சந்தியில் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டார். அவருடைய வாகனம் தீவிர பரிசோதனை செய்யப்பட்டது நன்றாகச் சிங்களம், ஆங்கிலம் பேசத் தெரிந்தவர் அந்த அதிகாரி. ஆங்கிலத்தில் பேசினால் சிப்பாய்களுக்கு விளங்காது. சிங்களத்தில் பேசினால் விளங்கும் என்ற எண்ணத்துடன் சிங்களத்தில் உரையாடினார். சிப்பாய்களைத் தவிர்த்து பொறுப்பதிகாரியுடன் பேசினார்.

எங்களைப் போல நன்றாக நீங்கள் சிங்களம் பேசுகின்றீர்கள் ஆனால் உங்களுடைய பெயர் தமிழ்ப் பெயர். அதுவும் உங்களைப் போன்ற உயர் அதிகாரிகள் தான் எல்லா வற்றுக்குமே உதவி செய்கின்றார்கள் ஆதலால் நாங்கள் உதவி செய்ய முடியாது நீங்கள் கடமையாற்றும் திணைக்களத்துடன் தொடர்பு கொண்ட பின்னர்தான் உங்களை இங்கிருந்து செல்வதற்கு அனுமதி அளிக்க முடியும்— என்று அந்த அதிகாரி கூறினார். மணித்தியாலயக் கணக்கில் தடுத்து நிறுத்தினார். சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவருடன் தொடர்பு கொண்ட பின்னரே இராணுவ அதிகாரி அந்த உயர் அதிகாரியை அலுவலகம் செல்வதற்கு அனுமதியளித்தார்.

தமிழன் என்றால் எந்தப் பெரிய பதவி வகித்தாலும் எல்லாம் ஒன்று தான் என்று நினைத்துக் கொண்டு சென்ற தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை எங்களுடன் பகிர்ந்து கொண்டார்.

வீதிகள், விடுதிகள், வீடுகள் இப்படி பலதரப்பட்ட இடங்களில் நட்டநடுநிசியில் கைது செய்யப்படும் தமிழர்கள் எல்லோரும் இரவு முழுவதும் கண்விழித்தபடி கால் கடுக்க நின்று கொண்டே தமது இரவுப் பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளது விடிந்தவுடன் என்ன நடக்கும் என்பது இவர்களுக்குத் தெரியாது.

பொலீஸ் நிலையங்களில் தடுத்து, அடைத்து வைக்கப்படும் தமிழர்களை மீட்டெடுத்துக் கொடுக்கும் தரகர்கள் தொழிலைப் பலரும் செய்கிறார்கள். அவர்களில் அனேகர் முஸ்லிம்கள். பேரம் பேசி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களுக்கான பணத்தைக் கறந்து பொலீஸ் நிலையங்களில் இருந்து இளைஞர்களை மீட்டெடுப்பார்கள். பெரும் தொகைப் பணத்தைக் கொடுத்த பின்னரே பல இளைஞர்கள் பொலீஸ் நிலையங்களில் இருந்து விடுதிகளுக்கும், வீடுகளுக்கும் செல்கிறார்கள். வெளிநாடு செல்வதற்காக கொழும்பு சென்ற பலரின் அரைவாசிப் பணம் இப்படியே கரைந்து போகிறது!

## தொழிற்சாலையில் கைது

எக்கலவிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றிய தமிழ் இளைஞர் ஒருவர் பணி செய்யும் இடத்திலேயே கைது செய்யப்பட்டார். காரைநகர் வாசி என்பதே அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம். அவர் பல மாதங்களாக மகஸீன் சிறைச்சாலையில் எந்தவிதமான விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அராலித்துறையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கும் இந்த இளைஞருக்கும் தொடர்பு உண்டு. அங்கு வெடிக்க வைக்கப்பட்ட குண்டை இந்த இளைஞரே தயாரித்தார் என்பதுதான் அந்த இளைஞர் மீதான குற்றச்சாட்டு.

அவரைச் சிறையில் வைத்துச் சித்திரவதை செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதன் கீழ் கையொப்பம் வாங்கி விட்டனர் இரகசியப் பொலீஸார். ஆனால் அவரின் உண்மைக் கதையோ வேறு.

இந்த இளைஞர் வெளிநாடு செல்வதற்காக முகவர் ஆயத்தங்களையும் செய்தார். சற்றுக் காலதாமதமாகும் என்று தெரியவந்ததும் சும்மா இருந்தால் பொலீஸார் கைது செய்து விடுவார்கள் அதுவரையும் வேலை செய்வோம் என்று நினைத்துத்தான் எக்கலவில் உள்ள தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்து அங்கு ஆறுமாதங்களாகப் பணிபுரிந்தார். அப்போதே தொழிற்சாலைக்கு வந்த பொலீஸார் அவர் காரைநகர் வாசி என அறிந்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டவர்கள் கைது செய்தது தொடர்பாகவும் விசாரணை செய்யப்பட்டது தொடர்பாகவும் பொலீஸ் நிலையங்களிலுள்ள பொறுப்பதிகாரிகளிடம் கடிதம் கேட்டால் பொறுப்பதிகாரிகள் கொடுப்பதில்லை. அது தேவையில்லை என்று வெளிப்படையாகவே கூறுகிறார்கள். அப்படி ஒரு விதிமுறை உண்டு. அத்தாட்சிக் கடிதம் தாருங்கள் என்று கேட்பதற்குத் தமிழர்களிடம் துணிவில்லை என்பது அவர்களுக்குத் தெரியும்.

இதனால் ஏற்கனவே கைதாகி பணம்கொடுத்து வெளியே வந்தவர்கள் மீண்டும் விடுதிகள், வீதிகளில் வைத்து கைதுசெய்யப்படுவது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

## சித்திரவதையும் புகைப்படமும்

பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் பின்னர் பொலீஸாரினால் தீவிர விசாரணைக்கு உள்ளாக வேண்டும். பின்னர் விசேட குற்றபுலனாய்வுப் பகுதியினரால் கொண்டு செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு பல கோணங்களில் புகைப்படங்கள் எடுக்கப்படுவார்கள். இவர்களின் கைவிரல் அடையாளமும் எடுக்கப்படும். தாம் செய்யாத குற்றங்களுக்காக அவர்களிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு கையொப்பம் வாங்கப்படும்.

இவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட 10 அல்லது 15 நாட்களுக்குப் பின்னர் தமிழ் இளைஞர்கள் பொலீஸாரினால் நீதிமன்றம் கொண்டு செல்லப்படுகின்றனர்.

ஏராளமான தமிழ் இளைஞர்கள் பல மாதங்களாக வெலிக்கடை, மகஸீன் சிறைச்சாலைகளிலும் மாத்தறையில் உள்ள சிறைச்சாலையிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சிறைச்சாலைகளில் இருந்து மாதந்தோறும் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டாலும் வழக்கு விசாரணை நடைபெறுவதில்லை. தொடர்ந்தும் சிறைச்சாலைகளில் அடைக்கப்படுகின்றார்கள்,

சிறைச்சாலைகளில் உள்ள தடுப்புக்காவல் அதிகாரிகளினாலும், சிங்களக் கைதிகளினாலும் எழுத்தில் வடிக்க முடியாதவாறு சித்திரவதை செய்யப்படுகிறார்கள். சிறைச்சாலைகளில் தமிழ் கைதிகள் ஒருவாறும் சிங்களக் கைதிகள் ஒருவாறும் பாரபட்சமான முறையில் கவனிக்கப்படுவதாகவும் அங்கு சென்று வந்த பல இளைஞர்கள் தெரிவித்தனர்.

பொலீஸ் நிலையங்களிலும் சிறைச்சாலைகளிலும் அடைத்து வைக்கப்படும் தமிழ் இளைஞர்களை பார்வையிடவும், உணவு கொடுக்க

(7 ஆம் பக்கம் பார்க்க)

இந்துமத குருமார் ஒன்றிய

வேதசிவாகம பாடசாலை

24-10-1993 ஞாயிறு விஜயதசமியாகிய இன்று காலை 10மணிக்கு நல்லூர் மனோகரா அம்மன் கோவில் மண்டபத்தில் ''சிவாச்சார்ய சிரோமணி'' [illegible] ஆரம்பிக்கப்படவுள்ளது. ஒன்றியத்தின் பழைய மாணவர்களும், புதிதாக சேர விரும்பும் மாணவர்களும் தவறாது சமூகம் தரும்படி அன்புடன் அழைக்கிறோம்.

கற்பிக்கப்படும் பாடங்கள்:

வேதம், ஆகமம், ஜோதிடம், சித்தாந்தம்

சாம்பசிவ சோமாஸ்கந்தசர்மா,
பொதுச் செயலாளர்,
இந்துமத குருமார் ஒன்றியம்.

(27766)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நவராத்திரி மகிமை

இயற்கைக்கு ஒருவகை சக்தி உண்டு. அந்தச் சக்தியினால் தான் உலகமே இயங்குகிறது. ஆனால் அந்தச் சக்தி எவரது கண்ணுக்கும் புலப்படுவதில்லை. இயற்கையை அன்னையாகப் போற்றி வணங்கும் மரபு ஆதி காலம் முதல் இருந்து வருகிறது.

இயற்கையை வழிபடுதலே அன்னை வழிபாடாகவும், சக்தி வழிபாடாகவும் அமைந்து விட்டது. உலகத்தை இயக்குபவன் இறைவன். இறைவனை இயக்குபவன், அவனுக்குத் தோன்றாத் துணையாக நிற்பவள் சக்தி. அவள் இன்றேல் ஓர் அணுவும் அசையாது. அவனோ அவள் இன்றி அசையமாட்டான். நடராசரின் சிவத் தாண்டவம் இந்த உண்மையை — கோட்பாட்டை — விளக்குவதே.

அவள் இன்றி உலகம் இல்லை என்றால் அவள் இன்றியும் உலகம் இல்லை என்பதேயாம். ஆதலின் சக்திவழிபாடு சிறப்புக்குரியது; மகத்துவமானது.

சக்தி வழிபாட்டினை ஒருங்கே சிறப்பித்துக் காட்டுவது நவராத்திரி விழா. உலக வாழ்வுக்குத் தேவையான வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றின் முக்கியத்துவத்தையும் நவராத்திரி விழா குறிக்கும். வீரத்தைத் துர்க்கையாகவும், செல்வத்தை இலக்குமியாகவும், கல்வியை சரஸ்வதியாகவும் உருவகித்து, அவற்றை மூன்று அன்னையராக, சக்தி வடிவங்களாகக் கண்டு வணங்குவது நவராத்திரியில்.

திண்ணிய உடலும் அசைவுறா மனமும் நிலைகுலையா ஆண்மையும் மனித வாழ்வுக்கு இன்றியமையாதவை. எமது நாடி நரம்புகளும் சதையும் திடமுற்று உறுதியடைந்து அதற்குள் திண்ணிய நெஞ்சம் திகழ துர்க்கை வழிபாடு துணை செய்யும்.

வாழ்க்கைக்கு ஆதாரமான சகல செல்வங்களும் ஒருவனுக்குச் சேரவேண்டும். செல்வம் இல்லையேல் சிறப்புக் கெடும். அந்தச் செல்வத்தை இலக்குமியில் காண்கின்றோம். எனவே அவளுக்குள்ள இலட்சுமிகரத்தை எமக்கும் வேண்டித் துதிக்கின்றோம்.

உலக வாழ்வை விளங்கிக் கொள்ள அறிவு தேவை. அந்த அறிவு பலவகைக் கலைகளிலும் அடக்கம். கலை வினைக்கு கரைகாணமுடியாதது கற்றுத் தேற வேண்டியது. துறை தோயக் கற்க வேண்டியது. கல்வியும், கலையும் தருமாறு வாணியிடம் வரம் கேட்கிறோம்.

ஆற்றல், செல்வம், அறிவு இவை சேர்ந்தாலே எவருக்கும் சிறப்பான, செழிப்பான வாழ்வு உண்டாகும். அவற்றை இறைஞ்சிக் கேட்கும் புனித இரவுகள் ஒன்பது இரவுகள் நவராத்திரி.

ஆற்றல், செல்வம், அறிவு அல்லது வீரம், கல்வி ஆகியவை நவராத்திரி நாட்களில் மட்டுமன்றி வருடம் முழுவதிலும் தேவையானவை. அவை எனக்கு மட்டும் சொந்தமாக வேண்டும் என்று எண்ணக்கூடாது. அடுத்தவருக்கும் அவற்றை அளிப்பதே சிறப்பானதாகும்.

## விஜயதசமி விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அனேக ஆலயங்களில் நவராத்திரி விழா முடிவுற்று விஜயதசமி தினமான இன்று மானம்பு விழாவும் சூரன்போரும் நடைபெறும்.

பாடசாலைகள், ஆலயங்கள், கல்வி நிலையங்கள் சனசமூக நிலையங்களில் இன்று காலை வித்தியாரம்பம் — ஏடு தொடக்கும் நிகழ்வு — நடைபெறும். தொழிலகங்கள் அலுவலகங்களில் ஆயுத பூசையும் இடம்பெறும்.

o o o

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை, கொழும்புத்துறை மணிப்புரி கலைமகள் சனசமூக நிலையம்; கட்டப்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையம், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்— யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை கல்வி நிலையம்; யாழ். மாவட்ட செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம், திருநெல்வேலி வாலை அம்மன் சனசமூக நிலையம், கனகெட்டி தெற்கு கலைவாணி சனசமூக நிலையம், அரியாலை சனசமூக நிலையம்—

ஆகிய இடங்களிலும் இன்று விஜயதசமி விழா நடைபெறுகிறது.

அரியாலை ஸ்ரீமகாமாரி அம்மன், சங்கத்தானை மீனாட்சி அம்மன், இலந்தைத்திடல் காளி, அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார், கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி, தெல்லிப்பழை கோவிந்புலம் அண்ணமார் ஆலயங்களிலும் இன்று மானம்பு நடைபெறுகிறது. (க-30-17-13-162-117)

### புறுண்டி ஜனாதிபதி படுகொலை

லண்டன், ஒக். 23

மத்திய ஆபிரிக்க நாடான புறுண்டியின் ஜனாதிபதி மெல்கியோர் என்டாடயே மற்றும் மூன்று அமைச்சர்கள் கட்டுக் கொலை செய்யப்பட்டனர். அந்நாட்டு இராணுவமே அவர்களை படுகொலை செய்தது.

புறுண்டியில் கடந்த வியாழன்று இராணுவம் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-க)

## இன்று

யாழ்ப்பாணம், ஒக். 24

திருநெல்வேலி இந்து இளைஞர் மன்றத்தால் இன்று முற்பகல் 9 மணிக்கு திருநெல்வேலி காயாரோகணேஸ்வரர் கோவில் தெற்கு வீதியில் அமைந்துள்ள அமுதசுரபி மண்டபத்தில் "மோகன் படிப்பகம்" திறந்துவைக்கப்படவுள்ளது. (-இ5)

### இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக். 24

அகில இலங்கை இளைஞர் மன்றத்தினரின் மாதாந்த இசை நிகழ்ச்சியும், வாணி விழாவும் மன்றக் கலாமண்டபத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.

மிருதங்க இசை, பாட்டு, புல்லாங்குழல் இசை ஆகிய கலை நிகழ்ச்சிகளை கலாமன்ற மாணவர்கள் நிகழ்த்துவார்கள். சிறப்பு நிகழ்ச்சியாக பரத நாட்டியம் அமையும்.

பிற்பகல் 3 மணிக்கு விஜயதசமி பூசையும், ஆரம்பநாள் வகுப்புகளும் இடம்பெறும். இன்றைய விழாவுக்குபிரம்மஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் தலைமை வகிப்பார். யாழ். பல்கலைக்கழக மொழியியல் துறைத் தலைவர் என். பாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-111)

### தெற்கில்....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் செல்லும் தமிழர்களும் கைது செய்யப்படும் சம்பவங்களும் உண்டு. கொம்பனித்தெரு, புறக்கோட்டை போன்ற பொலிஸ் நிலையங்களில் இத்தகைய அநேக சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களில் அடைத்து வைக்கப்படும் இளைஞர்கள் குழுமொடி மனிதர்கள் முன்னும் நிறுத்தப்படுகின்றனர். இன்று தமிழர்கள் கொழும்பிலேயே பல இன்னல்களை சந்தித்த வண்ணம் இருக்கின்றனர். எங்கு சென்றாலும் நிம்மதியின்றி அலைந்து திரிவதைக் காணக் கூடியதாகவுள்ளது. சந்தேகத்துக்குரிய பிராணிகளாகவே எப்போதும் கைதாகலாம்; அடைத்து வைக்கப்படலாம் என்ற அச்ச உணர்வுடனேயே ஒவ்வொரு நிமிடத்தையும் கழிக்கின்றனர். ★

### அறியாமை ..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை, ஆற்றலில்லை, ஆக்கமில்லை. எனவே தான் எல்லோரும் சக்தியை வணங்குகின்றனர். எங்கெங்கு காணினும் சக்தியடா என்று பாடினார் கவிஞர்.

"ஒன்றாகி ஐந்தொழிற்கும்
ஐந்தொழிற்கு முற்றுமிருள்
நின்றாள் பொற்பாதம்
நினைவாம்"

அறியாமை இருள் அகன்று அருள் ஒளி பரவும் விழாவாகவே இது அமைகின்றது. ஆக்கமும் நல்வாழ்வும் அறிவினாலேயே ஆவது. எனவே கல்வியே செல்வம் ஆகையினால் விஜயதசமி விழா கல்வித் தெய்வத்திற்குச் செய்யும் பெருவிழாவாகும். அது வித்தியாரம்ப நாளாகவும் விளங்குகின்றது.

அன்னையின் வடிவங்கள் பலவற்றுள் துர்க்கை வடிவம் மனித இதயத்தை மாசுபடுத்தும் ஆணவம், பேராசை முதலிய அசுரத் தன்மைகளை வென்று எமக்கு வாழ்வளிக்கின்றது. சரஸ்வதி வடிவம் அறியாமையை வென்று அறிவையும் ஆராய்வையும் தூண்டுகிறது. அறிவைத் தூய்மை செய்கின்றது. மகாலெட்சுமி வடிவம் வறுமையைப் போக்கி செல்வத்தைத் தந்து வாழ்வளிக்கின்றது.

மது கைடப வதத்திற்குக் காரணமாய் இருந்தவள் காளி மகிடாசுரனை வென்றழித்தவள் மகாலெட்சுமி. சும்பன் நிசும்பனை அழித்தவள் சரஸ்வதி. இறைவிக்கு மகிஷமர்த்தனி என்ற பெயர் துஷ்டனை நிர்க்கிரகம் செய்ததினால் ஏற்பட்டதாகும்.

அன்னையை ஆராதனை செய்வது அவளிடம் இருந்து உபகாரிப்புக்களைப் பெறுவதற்கேயாம். பேய்ப்பிள்ளையானாலும் தாய்க்கு பிள்ளைதானே. பெற்ற அன்னையிலும் பேராதரவு உடையவள் உலக அன்னையாம் அம்பிகை எனவே இந் நவராத்திரி நாட்களில் அம்பிகையை ஏற்றிய போற்றி கல்வி; செல்வம், வீரம் என்பவற்றிக்கு மேனாக பதினாறு பேறுகளும் பெற்று வாழ்வோமாக. ★

## ரணிலின் அவசர அமெரிக்க..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொல்வதாக ரணிலையே அழைத்து அனுப்பினார் ஜே. ஆர்.!

ரணிலின் இந்திய விஜயம் மிக வெற்றிகரமாக அமைந்தது. தமிழர்களின் தனிநாடு இலட்சியத்துக்குக் குந்தகம் விளைப்பதில் எந்த உதவி தேவையானாலும் செய்யத் தயார் என்று இந்தியா அன்புக்கரம் நீட்டியிருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

பிரதமர் ரணிலின் முதலாவது வெளிநாட்டு விஜயம்— இந்திய விஜயம்— நினைத்தது போலவே வெற்றி அளித்ததால் சைப்பிரஸில் நடக்கும் பொது நலவமைப்பு நாடுகளின் உச்சி மாநாட்டிலும் அவரே கலந்து கொள்கிறார்.

சைப்பிரஸ் போகும் வழியில் வர்த்தக - உற்பத்தி ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதனைச் சாட்டாக வைத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்கா செல்கிறது, காரண காரியத்தோடு தான்.

வல்லரசுப் போட்டி முடிந்து அமெரிக்காவே இப்போது உலகின் முதன்மை நாடாக, தலைவனாகத் திகழ்கிறது. அதனால், தமிழர் பிரச்சினையை தமது குசிக்கும், தேவைக்கும் ஏற்றால் போலத் தீர்ப்பதற்கு, இணைப்பதற்கு அமெரிக்காவையும் தன் பக்கம் சேர்த்துக் கொள்வதற்கு ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டுள்ளது.

அமெரிக்காவை முழுக்க, முழுக்க தனது பக்கம் இழுத்து இறுகக்கட்டிக் கொள்வதற்கு தானே வலிந்து சென்று உறவு கொண்டாடும் தந்திரத்தின் ஒரு படியே ரணிலின் அமெரிக்க விஜயம்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஐ. நா. மத்தியஸ்தம், வெளிநாடுகள் மத்தியஸ்தம் என்ற பேச்சுக்கள் இப்போது உலகளாவிய ரீதியில் அடிபடத் தொடங்கி விட்டன. நோபல் பரிசு பெற்ற அறிஞர்கள் நால்வரின் சமாதானத் திட்டம் என்றெல்லாம் உருவெடுத்து இனப்பிரச்சினை சர்வதேச மயப்படும் அறிகுறிகள் தென்படுகின்றன.

அவற்றைத் தடுப்பதும், தவிர்ப்பதும் ஸ்ரீலங்காவின் முக்கிய குறிக்கோள். மூன்றாமவர் எவரையும் இனப்பிரச்சினையில் தலையிடவிட்டால் நியாயத்தின் அடிப்படையில் தமிழர்களின் உரிமைகள் கிடைக்கும் சந்தர்ப்பம் உருவாகலாம். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. இதுவே ஸ்ரீலங்கா அரசின் உள்ளார்ந்த நிலைப்பாடு.

வெளியார் தலையீடுகளுக்கான முயற்சிகளை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்பதில் சிங்கள அரசு மிகவும் அவதானமாக உள்ளது. வெளியார் தலையீடு, ஐ. நா. தலையீடு என்று வரமல் தடுத்துத் தூரத்தே தள்ளி விடுவதற்கு உலகச் சண்டியன் பிள்ளையான அமெரிக்காவை தன் வசப்படுத்தி விடுவதே சிறந்த வழி என்று கொழும்பு அரசு கருதுகிறது.

அதற்கேற்ற வகையில் அமெரிக்கத் தலைவர்களை, குறிப்பாக புதிதாகப் பதவியில் அமர்ந்த ஜனாதிபதி கிளின்டனையும் அவரது சகபாடிகளையும் மயக்கி, தமது பக்கம் சேர்த்துக் கொண்டால் காரியம் சித்திபெறவும் என்பது கொழும்புத் தலைவர்களின் கருத்து.

இத்தகைய ஒரு நெருக்கமான உறவு நிலையை உண்டாக்குவதற்கு இருதரப்பு உயர்மட்டத் தலைவர்களும் நேருக்கு நேர் பேசினாலே சாத்தியம். அதனாலேயே ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்கா சென்றார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஸ்ரீலங்கா அரசு திறந்த மனதுடன் இருப்பதாகவும், விடுதலைப் புலிகளின் பக்கமே பற்று உள்ளதாகவும் அமெரிக்க உயர் தலைவர்களிடம் தெரிவித்திருக்கிறார் ரணில். ஸ்ரீலங்கா அரசு மாசு மறுவற்ற சுத்தப் பசுவென்பது போல ரணிலின் பேச்சுக்கள் அமைந்திருக்கின்றன]

கிளின்டன் அரசு பதவிக்கு வந்த பின்னர், இனப்பிரச்சினை நியாயமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று ஒரு சில தடவைகள் உறுக்கும் தொனியில் கருத்துக்கள் அங்கிருந்து வெளிவந்தன. அவை உத்தியோக ரீதியாக அறிவிக்கப்படவில்லை என்பது உண்மை தான். அரசாங்கத்துக்கு அரசாங்கம் என்ற மட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை. அறிக்கைகளாகவும் தனிப்பட்ட அமைப்புகளின் கருத்துக்களுமாகவே வெளிவந்தன.

எனினும் அவற்றைக் கண்டு ஸ்ரீலங்கா அரசு விழித்துக் கொண்டது. அமெரிக்கா எப்போதும் தனது பக்கத்துக்கே பேசும் விதத்தில் அதனை வசப்படுத்தும் நோக்குடன் செயற்பட வேண்டும் என உஷார் அடைந்தது.

அதனாலேயே சைப்பிரஸ் போகும் வழியில் ரணில் அமெரிக்காவிலும் தரித்தார். அவர் அங்கு தரித்தார் என்று சொல்வதை விட அமெரிக்காவுக்கு அவசர விஜயம் மேற்கொண்டார் என்று கூறுவதே பொருத்தம்.

வெளியார் — மூன்றாமவர் — தலையீடு வாசலை அடைப்பதும், அமெரிக்காவைத் தனது முழு ஆதரவாளனாக்கிக் கொள்வதும் ரணிலின் அமெரிக்க விஜயத்தின் நோக்கம்.

அதற்கேற்ற பின்னணியில் அவரது பேச்சுவார்த்தைகளும் கேட்டிகளும் அமைந்திருந்ததை அவதானிக்கலாம்.

ரணிலின் இந்திய விஜயம் வெற்றியளித்தது போலவே அமெரிக்க விஜயமும் வெற்றி அளித்திருக்கும் என நம்ப இடமுண்டு. எதற்கும் சில நாட்கள் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். ★

**பயிரின் கழிவு பயன்தரு உரமே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்களை அங்கு வைத்து "உங்கள் கனவுகளை நன வாக்குவோம்." என ஒரே குர லில் சபதம் செய்தனர்.

பின்னர் அங்கு போர்க் கால கருத்தரங்கு நடை பெற்றது. (ஒ-5)

## செஞ்சிலுவை கொடிவாரம்

யாழ்ப்பாணம், ஒக். 24

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் கொடிவாரம் இன்று முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது. (இ-5 80)

## அன்பான வேண்டுகோள்

18-10-93 அன்று பூநகரியில் இருந்து கொடிகாமம் நோக்கி பயணம் செய்கையில் முக்கிய பொருட்களும் எனது கடமை தொடர்பான முக்கிய தஸ்தா வேஜுக்களும் அடங்கிய பிரயாண பையினை சின்னப்பு சிவபாலசுப்பிரமணியம் ஆகிய நான் தவற விட்டுவிட்டேன். இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண காரியாலயத்தில் அல்லது சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்தில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சி. சிவபாலசுப்பிரமணியம்,
பொது முகாமையாளர்

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி. (சி-6270)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**ஆண்டு - 10 (O/L - 94)**

**ஆண்டு - 9 (O/L - 95)**

இறுதித் தவணைப் பரீட்சைக்கான மீட்டல் வினா - விடை வகுப்புகள்

திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ் முன்னணி ஆசிரியர் குழு!

| | |
|---|---|
| விஞ்ஞானம்: | திரு. J. R. சூசி |
| கணிதம்: | திரு. ஜெகன் |
| சமூகக்கல்வி: | திரு. கோபி |
| ஆங்கிலம்: | திரு. விஸ்வநாதன் |
| தமிழ்: | திரு. சிவா, திருப்பதி |
| சரித்திரம்: | திரு. கருணாகரன் |
| சமயம்: | திரு. சங்கர், கெங்கா |

ஆரம்பம்:

28 — 10 — 1993 (வியாழன்) மாலை 3 மணி

**O/L** 93 க்குரிய **PAPER CLASS**

மொத்தம் 9 பிரிவுகளில் நடைபெறுகின்றது
புதிய அனுமதிகள் இல்லை

(சி/6433

## ஆறாவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### டானியேல் குலசிங்கம் சின்னப்பு

(இளைப்பாறிய பெறியியலாளர்)

ஆறாண்டு சென்றாலும் அமரர் உந்தன்
அன்பினை நாம் நிதம் நினைந்து வாழ்த்துகின்றோம்.
கூறாகப் பிளந்தாலும் பாச உறவு
கூற்றுவனே உன்தனுக்கு வெற்றியில்லை
நீறாகப் போனாலும் உடலம்
ஆன்மா நித்தியனின் பாதத்தில் அடைக்கலமே.
மாறாத எம் துயரம் அவன் அன்பால்
வளர்த்திடு எம் அகத்தில் புதிய சக்தி.

குடும்பத்தினர்

874, பருத்தித்துறை வீதி,
நல்லூர். [27765]

## வடக்குக் கிழக்கிலுள்ள
# கூட்டுறவு சங்கங்கள் ஜனவரி முதல் பிரதேச செயலாளர்களின் கீழ்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் — அடுத்த ஆண்டு ஜனவரி முதல் — கூட்டுறவுச் சங்கங்கள் அமைந்துள்ள அவ்வப்பகுதி பிரதேச செயலாளர்களின் கீழ் இயங்கும்.

கடந்த மாதம் திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் மாநாட்டில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இப்புதிய நடைமுறை ஏற்கனவே வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேவேளை —

இப்புதிய நடைமுறையின் கீழ் இதுவரை காலமும் மாவட்டங்கள் தோறும் இயங்கி வந்த கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் என்ற பதவி அற்றுப்போவதுடன் —

கூட்டுறவு ஆணையாளரின் கீழ் இயங்கி வந்த கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என்ற பெயரில் இயங்குவர்.

வடக்கு - கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான திரு சி. வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற மேற்படி மாநாட்டில் எடுக்கப்பட்ட மேலும் சில தீர்மானங்கள் வருமாறு;

★ வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கென தனியான கூட்டுறவுச் சபை அமைக்கப்படும்.

★ வடக்கு கிழக்கு மாகாணத்தில் கூட்டுறவு வங்கிகள் மாவட்டந்தோறும் நிறுவப்படும்.

இதற்கான அனுமதிகள் வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் வழங்கப்படுகின்றன. (த-162)

## மரம் நடுகை

மரநடுகையை ஊக்குவிக்கும் முகமாக கடந்த வருடத்தினைப் போலவே இந்த வருடமும் ஒக்டோபர் இருபத்தாறாம் திகதி தொடக்கம் நவம்பர் முதலாம் திகதி வரையான காலப் பகுதி மரம் நடுகை வாரமாக பிரகடனப்படுத்தப் படுகின்றதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.

குடாநாட்டில் மட்டும் கடந்த வருடம் நடைமுறைப் படுத்தப்பட்ட மரம் நடுகை வாரம் இவ்வருடம் வட தமிழீழம் எங்கும் பரவலாக நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மரம் நடுகை வாரத்தில் மக்கள் மரநடுகையில் முழுமூச்சாக ஈடுபடுவதோடு, முன்னர் நடுகை செய்யப்பட்ட மரங்களுக்கு அமைக்கப்பட்டுள்ள கூடுகளை திருத்துதல், புதிய கூடுகளை அமைத்தல் போன்ற பணிகளில் ஈடுபடுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், பொது மக்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களை சார்ந்த அனைவரையும் மரநடுகை வாரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அக்காலப்பகுதிக்குள் திட்டமிட்ட வகையில் மரக்கன்றுகளை நடுகை செய்வது தொடர்பான கடமைகளில் ஈடுபடுமாறும் அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது; (த)

## மரண அறிவித்தல்கள்

### காத்திகேசு வைத்திலிங்கம்

மாரீசன்கூடல் இளவாலையைச் சேர்ந்த காத்திகேசு தம்பதிகளின் புதல்வன் வைத்திலிங்கம் காலமாகிவிட்டார்.

இவர் பூபதியின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி, நாகராசா, சிவசிதம்பரம், இவனேஸ்வரி, இந்திரன், சுன்னி, சத்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்திலிங்கம், மனோரராணி, ஜோதாம்பிகை, குணரத்தினம், நாகேஸ்வரி, ஜீவாகரன், சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேகா, சுரேகரன், சுதமரேகா, தபோதினி, தர்மிலா, தனுஷா, சஜீரூபன், மயூரசி கோமளா, வாகினி, சஜீவன், சஞ்சுதன், மதிசுதன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24-10-93 ஞாயிறு (இன்று) நண்பகல் 12 மணியளவில் குணரத்தினத்தின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(குணரத்தினம்)

178/1, அரசடி வீதி,
கந்தர்மடம். 27768

### அல்பிறட் மைக்கல் (சிங்கம்)

அல்பிறட் மைக்கல் (சிங்கம்) அவர்கள் 23-10-93 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை திரேசம்மா அவர்களின் மூத்த மகனும், திருமதி மனோரஞ்சிதம் (அல்லி) அவர்களின் அன்புக் கணவரும், மக்வெல், கருணாகரன் (பிரான்சு), மகிந்தா, அனெற், கீதாஞ்சலி, மரீனா பிரபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அருளம்மா, மேசியான், சுற்பேட், றெஜினா வயலெற் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஜோன் பொன்னுத்துரை, இராசநாயகம், யாக்கோபு, ஞானம்மா ஆகியோரின் மைத்துனரும், சிவனேசன், லதீஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் சுசிர்தன், பிரகாஷ், ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (24-10-93) ஞாயிற்றுக்கிழமை பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு 3 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

தகவல்
மனைவியும், பிள்ளைகளும்.

42/5, நல்லூர்றோட்,
யாழ்ப்பாணம் (27769

### திருமதி
### ஞானப்பிரகாசம் திரேசம்மா

மிக்கேலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஞானப்பிரகாசம் திரேசம்மா (24 - 10 - 93) இன்று அதிகாலை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மெல்கிரோர் ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், யூஜின் மெல்தலீடா (ஆசிரியர், தர்மபுரம்), அருள் வியானி சுரேதாஸ் (அருள் எலக்ரிக்கல்ஸ்), எமடியூஸ் இம்மனுவேல், மரியதாஸ், பற்றீசியா புஷ்பம், ராணி, யோகம், வசந்தி, ஆகியோரின் அன்புத் தாயாரும், மரியநாயகம், இந்திராணி, சகுந்தலா, புனிதம், மாணிக்கராஜா, அந்தோனிப்பிள்ளை, ஜெயசீலி, லில்லியம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24-10-93 பிற்பகல் 3 மணிக்கு இல: 29/5, புதுவீதி, சொய்பாத்தோட்டத்திலிருந்து நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
திரு. சுரேதாஸ்
(மகன்)
(அருள் எலக்ரிக்கல்)
(27770)

இல: 29/5, புதுவீதி,
சொய்பாத்தோட்டம்.

இப்பத்திரிகை திரு உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 332/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-10-1993 இல் அச்சிட்டு வெளியிடப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org